# சங்க இலக்கியம் நற்றிணையில் பெண்களின் நிலைப்பாடுகள்

*முனைவர் இரா. இந்துபாலா*
உதவிப்பேராசிரியர் , தமிழ்த்துறை
திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்
திருநெல்வேலி மாவட்டம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5773

***ஆய்வுச்சுருக்கம்***

*மனித குல வரலாற்றில் பெண்களுக்கென தனி இடம் உண்டு. பெண்ணின் வரலாறு தொலைந்து போன ஒன்றாகவே உள்ளது. ஏனென்றால் பெண் ஆணிற்கு அடங்கியவள் என்றும், அவனைச் சார் ந்து அவனுக்காகவே வாழ்பவள் என்னும் கருத்து மக்களிடையே பரவி இன்றும் காணப்படுகின்றது. மனிதன் தோன்றியது முதல் இன்றுவரை பெண்களின் உரிமைக்காகப்பலதுறைகள் போராடி வருகின்றன. நம் நாட்டில் ஆணுரிமை, பெண்ணுரிமை என இருபாலருக்கும் ஒழுக்கங்கள் வெவ்வேறாக வரையறுக்கப்பட்டுப் பெண், மனித அந்தஸ்தை இழந்தது நாம் அனைவரும் அறிந்ததே. பெண்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டு வந்ததை சங்ககாலம் முதலே இருந்துள்ளதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

***முன்னுரை***

பெண்ணினம் என்பது அச்ச உணர் விலிருந்தும், அடிமை உணர் விலிருந்து விடுதலை பெறுவது என்பது எளிதானதல்ல. இவ்வுணர் வினைப் போக்க வேண்டும் என்ற நிலையானது சங்க காலம் முதல் தற்காலம் வரை நீடித்துக் கொண்டே தான் இருக்கின்றது. பெண்களுக்கு சில உரிமைகள் பொதுவாக இருந்தாலும், பெண்களுக்கென உரிமைகள் மறுக்கப்படுவதும் உண்டு. களவுக்காலம் முதல் கற்புக்காலம் வரை பெண்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்படுவதை பெண்களின் நிலைப்பாடுகள் எவ்வாறிருந்தன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**களவு வாழ்வில் பெண்களின் நிலைப்பாடுகள்**

பழந்தமிழரின் வாழ்க்கையை அகம், புறம் என இரண்டாகப் பிரித்தனர் . ஆண் பெண்ணின் காதல் வாழ்வும், கற்பு வாழ்வுமே அகம் எனப்பட்டது. களவு என்பது திருமணத்துக்கு முன் ஆணும் பெண்ணும் உள்ளம் ஒன்றி இணைதலாகும். திருமணம் முடிந்த இல்லற வாழ்வில் ஈடுபட்டுக் குடும்பம், குழந்தை, விருந்தோம்பல், கணவனைப் பேணுதல், தலைவியின் பண்பு, கற்பு, சுற்றம் தழுவுதல் என இல்லறம் நடைபெற வேண்டும். இதுவே கற்பு வாழ்க்கை எனப்படும். களவு கற்பு வாழ்வின் இணைப்புப் பாலமாக திருமணம் இருந்ததை சங்க இலக்கியங்கள் இருந்ததை எடுத்துக்காட்டுகின்றன.

**இற்செறிப்பு**

தலைவன் தலைவியின் களவு வாழ்வில் தலைவி மட்டுமே தண்டனைக்குட்படுகிறாள். காதல் பற்றி வீட்டில் நற்றாய் செவிலிக்குத் தெரியவரும்போது தங்களது குடும்ப நலன் கருதியும் ஊராரின் அலர், அம்பலுக்குப் பயந்தும் தலைவியை இற்செறிக்கின்றனர் . இதனைத் தோழி,

***"மாஇருங் கூந்தல் மடந்தை***
***ஆய்வளைக் கூட்டும் அணியுமார் அவையே"***
***(நற்.60)***

என்ற பாடலடியின் வழி தோழி சிறைப் புறமாக நிற்கும் தலைவனிடம் உழவரிடம் கூறுவது போல கூறுகிறார். களவுக்காலத்தில் ஏற்படும் அலரினால் தலைவி மட்டுமே பாதிப்புக்குள்ளாகின்றாள் என்பது இதன் மூலம் தெரியவருகின்றது.

**வரைவு கடாதல்**

தலைவியானவள் தலைவனோடு மன மொத்திருப்பதை அறியாமல் நற்றாய் வேற்று வரைவிற்கு ஏற்பாடு செய்கின்றாள். இதனை,

***"மணி துணிந்தன்ன மாஇரும் பரப்பின்***
***உரவுத் திரை தொழீஇய புமலி பெருந்துறை"***
***(நற்.159)***

என்ற பாடலடியில் நெய்தல் நிலத் தலைவியின் ஆற்றாமையை அறியமுடிகின்றது. மேலும், தோழியும் வேற்று வரைவின்போது அறத்தொடு நிற்றலைக் காணமுடிகின்றது. தலைவனையே நினைத்து வருந்தும் தலைவிக்காகத் தோழி வேற்று வரைவினை எடுத்துக்கூறுகிறாள். இதனை,

***"உயர் மலை நாடற்கு உரைத்தல் ஒன்றோ - இந்நோய்***
***தணியுமாறு இது என உரைத்தல் ஒன்றோ"***
***(நற். 244)***

என்ற பாடலடியில் தலைவி அறத்தொடு நிற்றலை எடுத்துக்காட்டுகின்றது.

**உடன்போக்கு**

தலைவன் தலைவியின் திருமணம் தங்களது குடும்பத்தாரால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்றபோது, அவர்களிடையே உடன்போக்கு நிகழ்கிறது. இதனைச் சங்கப்பாடலில் பல இடங்களில் காண முடிகின்றது. தலைவனும் தலைவியும் உடன்போக்குச் செல்லும் நிலையினை நற்றிணையில்,

***"அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்து***
***வைஎயிற்று ஐயள் மடந்தை முன் உற்று***
***எல்லிடை நீங்கும் இளையோன் உள்ளம்"***
***(நற். 2)***

என்ற பாடலடியில் தலைவன் தலைவி உடன்போக்குச் செல்வதை விளக்குகின்றது. சங்க காலத்தில் பெண்களுக்குத் தங்களது வாழ்வினைத் தாங்களே தேர் வு செய்யும் அளவிற்கு உரிமை இருந்துள்ளதை சங்க இலக்கியங்களின்வழி அறியமுடிகின்றது. இதனால் களவுக் காலத்திலும் பெண்களுக்கு பல்வேறு விதமான இடர் பாடுகள் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. இந்தச் சூழலிலும் அவர்கள் தங்களுக்கான உரிமைகளை நிறைவேற்றிக் கொண்டதையும் காணமுடிகின்றது.

**கற்பு வாழ்வில் பெண்களின் நிலைப்பாடுகள்**

சங்ககாலப் பெண்களுக்குக் கற்பும் நாணமும் சிறந்த அணிகலன்களாக இருந்து ள்ளதை அறியமுடிகின்றது. சங்ககாலத்தில் பெண்ணின் பெருமையைப் பேசுவோர் அவளது கற்பினை முதன்மையாகக் கூறுவார்கள். இதனைக் குறளில்,

***"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்***
***பெய்யெனப் பெய்யும் மழை"***
***(குறள்.55)***

என்பது வள்ளுவர் வாக்கு. இதனைத் தொல்காப்பியமும் பெண்மைக்குரிய பல்வேறு பண்புகளில் கற்புடைமையே முதன்மையாகக் கருதுகின்றது. இதனை,

***"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்***
***செயிர் தீர்க் காட்சிக் கற்புச் சிறந்தன்று"***
***(தொல்.பொருள்.களவு.23)***

என்று தொல்காப்பிய நூற்பா சுட்டுகின்றது. இதனை நற்றிணையில்,

***"உயிரினும் சிறந்த நாணும்"***
***(நற். 17)***

என்ற பாடலடியில், தலைவனும் தலைவியும் இருவரும் இணைந்து மனமொத்து வாழ்வதையும் மனத்திண்மை மாறாத கற்பின் தன்மையையும் பல பாடல்கள் சுட்டுகின்றன. இதனை,

"சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்
***பிறப்புப் பிறிதாகுவ தாயின்***
***மறக்குவன் கொல் என் காதலன் எனவே"***
***(நற். 397)***

என்ற பாடலடியில் தான் இறந்தால் அடுத்தப் பிறவியில் என் கணவனை மறந்து விடுவேனோ என்ற அச்சத்தின் காரணமாக தான் இறக்கப் பயப்படுகின்றேன் என்று உரைக்கிறாள் தலைவி என்று பாடலடி உணர்த்துகின்றது. எந்தப் பிறவி எடுத்தாலும் இவ்வொருவனையே கணவனாக அடைய வேண்டும் என்ற மனத்திண்மையும் மன உறுதியும் உடையவளாகவே படைக்கப் பட்டுள்ளாள் தலைவி. இம்மையில் இன்பத்தை நுகராது கழியும் இளமையை மீட்பது என்பது இயலாத காரியம் என்று உணர் ந்திருந்தனர் . இவ்வாறு நெருங்கிய வாழ்வினை,

***"நறுங்காழ் ஆரமொடு மிடைந்த மார் பிற்***
***குறும்பொறிக் கொண்ட கொம்மையம் புகர்ப்பின்***
***கருங்கண் வெம்முறை ஞெமுங்கப் புல்லிக்***
***கழிவதாக கங்குல்"***
***(நற்.314)***

என்ற நற்றிணைப் பாடல் எடுத்துக் காட்டுகின்றது. சங்ககாலத் தலைவியர் கணவனை உயிராகவும், அவனது விருப்பு வெறுப்புகளுமே தனதாக்கிக் கொண்டு வாழ்கின்றனர் . சங்ககாலப் பெண்கள் தனது கணவனின் வருவாய்க்கேற்ப வாழ்வதே பெருமை என்று நினைத்து வாழ்ந்தனர் என்பதையும் அறியமுடிகின்றது.

### விருந்தோம்பலில் பெண்களின் நிலைப்பாடு

தமிழரின் பண்பாடுகளுள் தலைசிறந்தது விருந்தோம்பல் என்னும் பண்பாகும். சங்ககாலப் பெண்கள் விருந்தோம்பல் பண்பில் நன்கு உணர்ந்து செயல்பட்டு சிறந்து விளங்கினர். இதனை

***"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி***
***வேளாண்மை செயற் பொருட்டு"***
***(குறள்.81)***

என்ற வள்ளுவரின் குறள் சுட்டுகின்றது. வினைமுற்றி மீளும் தலைவன் ஒருவன் தன் தலைவியின் விருந்தோம்பல் பண்பினை நினைத்து மகிழ்தலை,

***"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்***
***முல்லை சான்ற கற்பின் மெல்லியல்"***
***(நற். 142)***

என்ற பாடலடி எடுத்துக்காட்டுகின்றது. விருந்தினர் எந்த நேரம் வந்தாலும் அவர் களை அகமலர் ந்து வரவேற்று செயல்படும் தலைவியைப் பற்றி நற்றிணை மற்றொரு பாடல் உணர் த்துகின்றது. இதனை,

***"எல்லி வந்த நல்லிசை விருந்திற்குக்***
***கிளரிழை அரிவை நெய்துழந்தட்ட***
***விளருன் அம்புகை எறிந்த நெற்றிச்***
***சிறுநுண் பல்வயிர்"***
***(நற்.41)***

என்ற நற்றிணைப் பாடலடி தலைவியின் விருந்தோம்பல் பண்பினைப் புகழ்ந்து கூறுகின்றது.

### வாயில் மறுத்தல் நிலைப்பாடுகள்

சங்ககாலத்தில் பெண்களுக்குத் தலைவன் செய்யும் தவற்றை அவர் கள் சுட்டிக்காட்டி தண்டிக்கும் உரிமை இருந்திருக்கிறது. தலைவன் தன்னுடைய ஆசைக்காகப் பரத்தையரை நாடிச் செல்வதும், இல்லப்பரத்தையுடன் உறவு கொள்வதும் உண்டு. இதில்

மனைவியின் தனி உரிமைகள் மறுக்கப்பட்டு. கணவனது வருகைக்காகக் காத்திருப்பவளாகவும் படைக்கப்பட்டுள்ளதை சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன.

அந்த வகையில், நற்றிணையில் பரத்தையர் பிரிவினைத் தட்டிக்கேட்கவும் வாயில் திறக்க மறுக்கவும் உரிமைப் பெற்றவர்களாக மகளிர் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. இதனை,

**“பெருஞ்சினந் தணியுங் குன்ற நாடன்**
**நனிபெரிது இனியன் ஆயினுந் துனிபடர் ந்து**
**ஊடல் உறுவேன் தோழி நீடு.”**

(நற். 217)

என்ற பாடலடியில் பெண்கள் தலைவனை மன்னிப்பதால் தனது குடும்ப வாழ்க்கை குலைந்து விடாமல் காப்பது ஒரு வழியாகும் என்று நம்புகின்றனர் . இவை மட்டுமில்லாது, தலைவனுக்காகப் பேச வரும் பாணனுக்கு வாயில் மறுத்தல் (நற். 217), விறலிக்கு வாயில் மறுத்தல் (நற். 170) ஆகிய பாடல்கள் குறிக்கின்றன.

## முடிவுரை

சங்ககாலத்தில் பெண்களுக்கு கற்பு என்பது ஓர் ஒழுக்கமாக இருந்துள்ளதை சுட்டப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் நற்றிணையில் ஒட்டு மொத்தமாக ஆராயும் போது குடும்ப அளவில் ஆண்களால் ஏற்படும் பிரச்சினை களினால் பெண்கள் மனதில் ஏற்படும் மனஅமைதியின்மையும், குடும்பத்தில் ஏற்படும் குழப்பத்தையும் தவிர்க்கும் பொருட்டு அக்காலச் சமுதாயம் அமைத்துக் கொண்டனர் என்பதை அறியமுடிகின்றது. பெண்களுக்கான உரிமைகள் வரையறுக்கச் செய்யப்பட்டுள்ளதையும் அறியமுடிகின்றது பெண்கள் சங்ககாலச் சமூகத்தில் உரிமைகளையும் அவர்களுக்கென்று உருவாக்கப்பட்ட கடமைகளையும் உணர்வோடு செயல்பட்டதையும் இங்கே காணமுடிகின்றது.

## துணைநூற்பட்டியல்


1. சங்க இலக்கியம் மூலம் முழுவதும் - ச.வே.சுப்பிரமணியன் - மணிவாசகர் பதிப்பகம், சென்னை - முதற்பதிப்பு 2006
2. சங்கஇலக்கியம் நற்றிணை - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - முதற்பதிப்பு 2004
3. திருக்குறள் இனிய உரை - புலவர் நாராயணசாமி - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை - முதற்பதிப்பு 1997
4. தொல்காப்பியம் தெளிவுரை - ச.வே.சுப்பிரமணியன் - மணிவாசகர் பதிப்பகம்,சென்னை-பதின்மூன்றாவது பதிப்பு 2017.